*55*

# "ஒரு கிறிஸ்தவர் யாரைப்போல் காணப்படுகிறார்?"

## (12:14-16)

ஒரு சிறுபையன், "கிறிஸ்தவர்" என்ற வார்த்தை வகுப்புகளிலும் பிரசங்கங்களிலும் பலமுறை பயன்படுத்தப்படுவதைக் கேள்விப்பட்டிருந்தான், ஆனால் அது எதை அர்த்தப்படுத்தியது என்பது பற்றி அவன் நிச்சயமற்றவனாக இருந்தான். ஒருநாள் அவன் தனது தந்தையிடம், "அப்பா, கிறிஸ்தவர் என்றால் என்ன?" என்று கேட்டான். அவனது தந்தை அவனிடத்தில், கிறிஸ்தவர் என்பவர் கிறிஸ்துவுக்கு உரியவர் என்று கூறி, ஒருவர் எவ்வாறு கிறிஸ்தவர் ஆகிறார் என்பதைப் பற்றி அவனுக்கு விளக்கம் அளித்தார். அந்தப் பையன் திகைப்படைந்தவனாகக் காணப்பட்டான், எனவே அவனது தந்தை "ஒரு கிறிஸ்தவர் குறிப்பிட்ட வகையிலான வாழ்வை வாழவேண்டியவராக இருக்கிறார். ரோமருக்கு எழுதிய நிருபம் 12ம் அதிகாரத்தை நான் படித்திருக்கிறேன், அந்த அதிகாரம், ஒரு கிறிஸ்தவர் மாறுபட்ட சூழ்நிலைகளில் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதற்கு ஒரு நல்ல தொகுப்புரையாக உள்ளது" என்று கூறினார். ரோமர் 12:9-16ன் மீதான தமது குறிப்புகளைத் தேடி எடுத்து அவர் வாசித்தார், "ஒரு கிறிஸ்தவர் அன்புகூருபவராக, சுயநலம் இல்லாதவராக, விருப்பார்வம் உள்ளவராக, நிலைமாறாதவராக, உதவிநிறைந்தவராக, இரக்கம் உள்ளவராக, பரிவிரக்கம் உள்ளவராக மற்றும் தாழ்மை உள்ளவராக இருக்கிறார்."[1] அந்தப்பையன், தனது தந்தையின் வார்த்தைகளைப் பற்றிச் சிந்தித்து, பின்பு, "நான் இப்படிப்பட்ட ஒருவரை எப்போதாவது சந்தித்து இருக்கிறேனா?" என்று கேட்டான்.

ரோமர் 12:2ல் பவுல் ஒவ்வொரு கிறிஸ்தவரும் *மறுரூபமான* வாழ்வை வாழ வேண்டும் என்று வேண்டிக்கேட்டுக்கொண்டார். 9 முதல் 16 வரையிலான வசனங்களில் அவர் மறுரூபமான வாழ்விற்கான - ஒரு கிறிஸ்தவர் யாரைப்போல் காணப்படுகிறார் என்பதற்கான - உதாரணங்களைக் கொடுத்தார். 9 முதல் 13 வரையிலான வசனங்களை நாம், "அன்புகூர அறைகூவல்" என்ற தலைப்பின்கீழ் படித்தோம். இந்தப் பாடத்தில் நாம் எஞ்சியுள்ள மூன்று வசனங்களைப் பற்றிக் கலந்துரையாடுவோம். பவுலின் பட்டியலில் புதிய விஷயம் எதுவும் இல்லை. அவரது வாசகர்கள் அனேகமாக, இவைபோன்ற புத்திமதிகளை அடிக்கடி கேள்விப்பட்டிருக்கலாம், ஆனால் இவ்வகையான வாழ்வு என்பது விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதலின் *இயல்பான விளைவாக* இருக்க வேண்டும் என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று பவுல் விரும்பினார்.

பவுலின் அறிவுறுத்தல்கள் முதல் நூற்றாண்டில் போலவே இன்றைக்கும்

பொருத்தமானவையாக உள்ளன. R. C. பெல் என்பவர், "இவ்வசனப்பகுதியில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளவற்றைப் புரிந்துகொள்ளுதலில் அல்ல, ஆனால் கீழ்ப்படிதலில்தான் நமது சிரமம் உள்ளது" என்று எழுதினார்.[2] மற்றவர்களுடன் - சக கிறிஸ்தவர்கள், நமது அயலகத்தார் மற்றும் நண்பர்கள், மற்றும் நமது விரோதிகளுடன்கூட - நமது உறவுமுறை என்பதன்மீதே நமது வேதபாட வசனப் பகுதியின் வலியுறுத்தம் அமைந்துள்ளது. வேதபாடவசனத்தை நாம் படிக்கையில், குறிப்பிட்ட சூழ்நிலைகளில் "ஒரு கிறிஸ்தவர் எவ்வாறு காணப்படுகிறார்" என்பதை நாம் கண்டறிவோம். நம்மில் ஒவ்வொருவரும், "என்னை அறிந்துள்ள வர்கள் எப்போதாவது 'ஒரு கிறிஸ்தவரைக் கண்டுள்ளனரா?' " என்று கேட்டுக் கொண்டாக வேண்டும்.

## ஒரு கிறிஸ்தவர் இரக்கம் உள்ளவராக இருக்கிறார் (12:14)

இயேசு தமது சொந்த ஊழியத்தின்போது, தம்மைப் பின்பற்றுபவர்களை உலகம் எவ்வாறு நடத்தும் என்பது பற்றித் திகைப்பூட்டும் சில கூற்றுக்களை ஏற்படுத்தினார். அவர் தமது சீஷர்களிடத்தில், மக்கள் "உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாய்ச் சொல்வார்கள்" என்று கூறினார் (மத்தேயு 5:11). மீண்டும் அவர், மனிதர்கள் "உங்களைப் பகைத்து, உங்களைப் புறம்பாக்கி, உங்களை நிந்தித்து, உங்கள் நாமத்தைப்பொல்லாததென்று தள்ளிவிடுவார்கள்" என்று கூறினார் (லூக்கா 6:22). ஒரு கிறிஸ்தவர் அந்த சூழ்நிலைகளில் தாம் இருக்கக் காணும்போது "யாரைப்போல் காணப்படுகிறார்"? தேவனுடைய பிள்ளையானவர் அவ்வாறு நடத்தப்படும்போது, அவர் *இரக்கமுள்ளவராக இருக்க வேண்டும்* என்று பவுல் கூறினார்: "உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதியுங்கள்;[3] ஆசீர்வதிக்க வேண்டியதேயன்றிச் சபியாதிருங்கள்." இவ்வார்த்தைகள், இவ்வதிகாரத்தின் கடைசி ஐந்து வசனங்களில் விரித்துரைக்கப்படும் ஒரு தலைப்பை அறிமுகப் படுத்துகின்றன (ரோமர் 12:17-21).

"ஆசீர்வதியுங்கள்" என்பது, "ஒரு நல்வார்த்தை" என்ற நேரடி அர்த்தம் கொண்டுள்ள "eulogy" என்ற வார்த்தையை நாம் பெறுகிற வினைச்சொல்லின் வடிவமான *eulogeo* (இது *eu* ["நல்ல" அல்லது "நன்று"] கூட்டல் *logos* ["வார்த்தை"]) என்பதிலிருந்து வருகிறது.[4] யாரேனும் ஒருவரை "eulogize" செய்தல் என்பது அவருக்காக "ஒரு நல்ல வார்த்தை கூறுதல்" என்பதாக உள்ளது. இவ்விஷயத்தில், *eulogeo* என்பது நம்மைத் தவறாக நடத்துகிறவர்களுக்காகத் *தேவனிடத்தில்* "ஒரு நல்ல வார்த்தை கூறுதல்" என்பதாக உள்ளது. "சபித்தல்" (இது *ara* ["ஒரு சாபம் கூறுதல்"] என்பதன் வினைச்சொல் வடிவம் *kata* என்பதைக் கொண்டு வலுவூட்டப்படுகிறது) என்பது "சாபவார்த்தைகள்"[5] என்று அழைக்கப்படுபவற்றைப் பேசுதல் என்பதை அல்ல, ஆனால் அதற்கு மாறாக, "ஆசீர்வாதம்" என்பதன் எதிர்மறையைக் குறிப்பதாக உள்ளது: இது நம்மை துன்புறுத்துபவர்கள்மீது தேவனுடைய சாபங்களைக் கீழே அழைப்பதைக் குறிக்கிறது. CEV வேதாகமம் 14ம் வசனத்தை பின்வருமாறு மொழிபெயர்க்கிறது: "Ask God to bless everyone who mistreats you. Ask him to bless them and not to curse them." இவ்வசனம் இயேசுவின் பின்வரும் போதனையை எதிரொலிக்கிறது:

"உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காக ஜெபம்பண்ணுங்கள்" (லூக்கா 6:28; காண்க மத்தேயு 5:44).

ஒரு மறுப்புரையை நான் எதிர்பார்க்கிறேன்: "ஆனால் அது சாத்தியமற்றதாக உள்ளது!" அது *கடினமானதாக* இருக்கிறது, ஆனால் *சாத்தியமற்றதாக* இருப்பதில்லை. சிலுவையில் இருந்த வேளையில் இயேசு, "பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" என்று கூறியபோது அவர் இதையே செய்தார் (லூக்கா 23:34). ஸ்தேவானும் இதையே செய்தார். அவரைக் கொல்லும்படி கல்லெறியப்பட்டபோதுகூட, அவர் "ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும்!" என்று ஜெபித்தார் (நடபடிகள் 7:60). பவுலும் அதையே செய்தார். கொரிந்தியர்களுக்கு அவர், "வையப்பட்டு, ஆசீர்வதிக்கிறோம்" என்று கூறினார் (1 கொரிந்தியர் 4:12).

ரோமர் 12:14ம் வசனம் தேவனுடைய பிள்ளை என்ற வகையில் துன்புறுத்தப்படுதல்மீது முதன்மையாகக் கவனம் செலுத்துகிறது, ஆனால் இவ்வசனம் மோசமாக நடத்தப்படுதலின் மற்ற சூழ்நிலைகளுக்கும் நடைமுறைப்படுத்தப்படக்கூடும். சிலவேளைகளில் கிறிஸ்தவர்கள் மக்கள் எப்போதும் மற்றவர்களிடத்தில் இரக்கமாய் இராத ஒரு உலகத்தில் வாழ்வதால் மாத்திரமேமோசமாக நடத்தப்படுகின்றனர். அப்படிப்பட்ட சூழ்நிலைகளில், அவிசுவாசிகள் அடிக்கடி சபிக்கின்றனர் - ஆனால் ஒரு கிறிஸ்தவர் ஆசீர்வதிக்கிறார். மோசமாக நடத்தப்படுதல் வரும்போது (அதன் ஆதாரமூலம் எதுவாக இருந்தாலும்), "ஒரு கிறிஸ்தவர் யாரைப் போல் காணப்படுகிறார்?" ஒரு கிறிஸ்தவர் இரக்கமுள்ளவராக இருக்கிறார்.

## ஒரு கிறிஸ்தவர் பரிவிரக்கம் உள்ளவராக இருக்கிறார் (12:15)

கிறிஸ்துவைப் பின்பற்றுபவர் *பரிவிரக்கம்* உள்ளவராக இருக்க வேண்டும் என்பது அவரது இன்னொரு பண்பாக உள்ளது. பவுல், "சந்தோஷப்படுகிறவர்களுடனே சந்தோஷப்படுங்கள்; அழுகிறவர்களுடனே அழுங்கள்" என்று எழுதினார் (வசனம் 15). இந்த புத்திமதி, சககிறிஸ்தவர்களுடன் நமது உறவுமுறைக்கு விசேஷித்த நடைமுறைப் பயன்பாட்டைக் கொண்டுள்ளது. ரோமர் 12ன் முதல் பகுதியில் பவுல், நாம் "... ஒரே [ஆவிக்குரிய] சரீரத்திலே [சபையிலே] அநேக அவயவங்களிருந்தும் ... நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம்" என்று வலியுறுத்தினார் (வசனங்கள் 4, 5). கொரிந்தியருக்கு எழுதியதில் அவர், "ஆதலால் [சரீரத்தின்] ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும்கூடப் பாடுபடும்; ஒரு அவயவம் மகிமைப்பட்டால் எல்லா அவயவங்களும்கூடச் சந்தோஷப்படும்" என்று கூறினார் (1 கொரிந்தியர் 12:26).

ரோமர் 12:15ம் வசனம் சபையின் உறுப்பினர்களுக்கிடையில் ஒரு நெருங்கிய தன்மையை முன் அனுமானம் செய்கிறது. இந்த நெருங்கிய தன்மை என்பது, ஒவ்வொரு வாரமும் மற்ற கிறிஸ்தவர்களுடன் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்பதால் மாத்திரம் அடைந்துவிட இயலாது. இது ஒவ்வொரு வாரமும் பலமுறை ஆராதிக்க ஒன்றுகூடும் கூட்டத்தினால் நிறைவேற்றப்படுவதில்லை. இது வேதாகம வகுப்புகள் மற்றும் ஆராதனை ஊழியங்களுக்கு முன்னும்

பின்னும் ஒருவர் மற்றவருடன் கலந்துரையாடுவதினால்கூட வருவதில்லை. இவையாவும் முக்கியமானவைகளே, ஆனால் 15ம் வசனம், இன்னும் அதிகமான வற்றிற்கு அழைக்கிறது. ஆக்லஹாமா கிறிஸ்தவப் பல்கலைக்கழகத்திலுள்ள ஒரு ஆசிரியர் தாம் உள்முகச்சிந்தனையுள்ளவராக இருப்பதாக ஒப்புக்கொள்கிறார், இருப்பினும், அவர் தமது மாணவர்களிடத்தில், "நாம் இயல்பாகவே வெளிப்படை யானவர்களாக இருந்தாலும் அல்லது அவ்வாறு இல்லையென்றாலும், நாம் மக்களின் வாழ்வில் ஆழமாக ஈடுபாடு கொண்டிருக்கும்படி வேதாகமம் நம்மை அழைக்கிறது" என்று கூறுகிறார்.[6] நாம் மகிழ்ச்சி மற்றும் கண்ணீர் ஆகியவற்றைக் கொண்டுவருகிற - பிறப்புகள், திருமணங்கள், மற்றும் சவ அடக்கங்கள் போன்ற - நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளுகையில் ஒருவர் மற்றவருடன் நெருக்கமாவதில் வளர்கிறோம்.

இவ்வகையான நெருக்கத்தை நாம் கிறிஸ்துவின் சரீரத்தில் எவ்வாறு உண்மைநிலையாக்க இயலும்? "அக்கறை" மற்றும் "பகிர்வு" என்பவை திறவு கோல் வார்த்தைகளாக உள்ளன. கிறிஸ்துவுக்குள்ளான நமது சகோதர சகோதரிகளின் வாழ்வில் என்ன நடந்துகொண்டுள்ளது என்பது பற்றி நாம் *அக்கறை யுள்ளவர்களாக* இருத்தல் அவசியமாகிறது. பின்பு நாம், நமது வாழ்வில் வருகிற நல்ல மற்றும் மோசமான விஷயங்களைச் சக கிறிஸ்தவர்களுடன் *பகிர்ந்துகொள்ளுதல்* அவசியமாகிறது.

15ம் வசனம் தேவனுடைய பிள்ளைகளுடனான நமது உறவை முதன்மை யாகக் குறிப்பிடுகிறது என்று சந்தர்ப்பப்பொருள் சுட்டிக்காண்பித்தாலும், இவ்வசனப்பகுதி இன்னும் பரந்த அளவிலான நடைமுறைப் பயன்பாட்டைக் கொண்டிருக்க முடியும். ஒரு கிறிஸ்தவர் தாம் தொடர்புகொள்ளும் எல்லாரு டனும், நன்மைக்கான செல்வாக்கை யார்மீதெல்லாம் செலுத்தலாம் என்று அவர் நம்புகிறாரோ, அவர்கள் எல்லாருடைய வாழ்விலும் ஆர்வமுடையவராக இருக்க வேண்டும். இதுவே செய்வதற்குச் சரியான விஷயமாக இருப்பதால் அவர் இதைச் செய்கிறார், ஆனால் சில வேளைகளில் கூடுதலான ஒரு பயன் உள்ளது: மக்கள் தங்கள் வாழ்வின் பரபரப்பான கணங்களில் - புன்னகைகள் அல்லது கண்ணீர்கள் என்பவற்றை வரவழைக்கும் நிகழ்வுகளின் வேளைகளில் - சுவிசேஷத்தை மிகவும் ஏற்கக்கூடியவர்களாக அடிக்கடி இருக்கின்றனர்.

15ம் வசனத்தில் பவுலின் அறிவுறுத்துதலை இன்னும் அதிக அறைகூவல் விடுக்கிறதாக ஆக்க என்னை அனுமதியுங்கள். இன்னொருவருக்கு நன்மை யான சிலவிஷயங்கள் நடக்கும்போது, உங்களுக்கு மோசமான விஷயங்கள் மாத்திரமே நடப்பதாகக் காணப்பட்டால் அதைப்பற்றி என்ன செய்வது?[7] அவருடன் சேர்ந்து நீங்கள் சந்தோஷப்படக்கூடியவராக இருக்கிறீர்களா? யாரேனும் ஒருவர் உங்களைத் தவறாக நடத்தியிருந்து, அவரது வாழ்வு திடீ ரென்று துன்பத்தினால் நிரப்பப்படும் நிகழ்வு பற்றி என்ன? அவருடன் சேர்ந்து நீங்கள் அழக்கூடியவராக இருக்கிறீர்களா? அல்லது "அவருக்குத் தகுதியானதை அவர் பெற்றுக்கொண்டார்" என்று நீங்கள் நினைக்கிறீர்களா? யாரேனும் ஒருவர், "நீங்கள் விவரித்துள்ளது போன்ற சூழ்நிலைகளில் மற்றவருடன் சேர்ந்து சந்தோஷப்படுதல் அல்லது அழுதல் என்பது இயல்புக்கு மாறானது" என்று மறுத்துரைக்கலாம். அது உண்மையே. அது இயல்புக்கு மாறானதாகவே உள்ளது, ஆனால் கிறிஸ்தவர்கள் தேவனுடைய உதவியுடன் மாம்சப்பிரகார மான இயல்பான மனவிருப்பங்களுக்கு மேலாக எழும்பி நிற்க வேண்டும் என்று

அறைகூவல் விடப்படுகின்றனர்.

ஒரு கிறிஸ்தவர் எவரொருவருடனும் சேர்ந்து பாடவோ அல்லது துன்புறவோ முடிபவராக இருக்கிறார். ஒரு கிறிஸ்தவர் பரிவிரக்கம் உள்ளவராக இருக்கிறார்.

## ஒரு கிறிஸ்தவர் தாழ்மையானவராக இருக்கிறார் (12:16)

16ம் வசனத்தில் பவுல் மாபெரும் செல்வம் அல்லது அதிகாரம் கொண்டிருப்பதால், அதிகம் திறமைகள் அல்லது மிக உயர்ந்த கல்விகற்றிருப்பதால், அல்லது வேறு எந்தக் காரணங்களினாலும், மற்றவர்களைவிடத் தங்களை மேன்மையானவர்கள் என்று கருதியவர்களுக்குப் புத்திமதி உரைத்தார். இந்த வசனப் பகுதியை நாம் மிக நீண்ட காலமாகக் கிறிஸ்தவராக இருப்பதால், வேதாகமத்தில் மாபெரும் அறிவுடையவராக இருப்பதால், மற்றும் சபையின் ஊழியத்தில் மிகவும் செயல்துடிப்பாக இருப்பதால், அதிகம் தேவபக்தியான வாழ்வை வாழ்வதால், மற்றும் இன்னபிற காரணங்களினால் சபையிலுள்ள மற்ற உறுப்பினர்களைக் காட்டிலும் தங்களை மேலானவர்களாக உணருபவர்களுக்கும் நடைமுறைப்படுத்த முடியும்.

**எண்ணப்போக்கு**

பவுல், "ஒருவரோடொருவர் ஏகசிந்தையுள்ளவர்களாயிருங்கள்" என்று தொடங்கினார் (வசனம் 16அ). வேறொரு இடத்தில், "ஏகசிந்தையுள்ளவராயிருத்தல்" என்பதற்கான அறைகூவல் என்பது நாம் விசுவாசிக்கும் மற்றும் போதிக்கும் விஷயங்களில் ஒருமைப்பாடுள்ளவர்களாக இருத்தலைக் குறிக்கிறது (1 கொரிந்தியர் 1:10). இங்கு இது, "எல்லாரையும் ஒன்றுபோல் நடத்துதல்; பட்சபாதம் காட்டாதிருத்தல்" என்று அர்த்தப்படுவதாகக் காணப்படுகிறது. JB வேதாகமத்தில், "Treat everyone with equal kindness" என்றுள்ளது.

**ஒன்றிணைவு**

வேதபாட வசனப்பகுதி, "மேட்டிமையானவைகளைச்[8] சிந்தியாமல், தாழ்மையானவர்களுக்கு இணங்குங்கள்" என்று தொடருகிறது (ரோமர் 12:16ஆ). இன்றைய நாட்களில் இருப்பது போலவே பவுலின் நாட்களிலும் மூடபக்தி நிலவியிருந்தது. செல்வந்தரான ஒரு மனிதரும் ஏழையான ஒரு மனிதரும் சபை கூடுகையில் எவ்வாறு மாறுபட்ட வகையில் நடத்தப்படக்கூடும் என்பது பற்றி யாக்கோபு சித்தரித்தார் (காண்க யாக்கோபு 2:1-9). கந்தலான, கிழிந்த உடையணிந்து, செல்வச்செழிப்பிலிருந்த ஒரு சபைக்கு ஆராதனை ஊழியத்தின் போது வந்த ஒரு ஏழை மனிதரைப் பற்றிய கதை ஒன்று கூறப்படுகிறது. தனது செல்வச் செழிப்பில் விலையுயர்ந்த உடைகளும் ஆபரணங்களும் அணிந்திருந்த ஒரு பெண்ணின் அருகில் அந்த மனிதர் அமர்ந்தார். அந்தப்பெண், தன்னால் இயன்ற அளவுக்கு அந்த மனிதரைவிட்டுத் தூரமாகச் சென்றமர்ந்தாள். காலி இருக்கைகளுக்கு வழி நடத்துபவர் வந்தபோது, அவரிடத்தில் அவள் உரத்த சிசுகிசுப்பான குரலில், "நான் முகரும் வாசனையை நீங்கள் முகருகிறீர்களா?" என்று கேட்டாள். அதற்கு அவர் காற்றைத் தனது மூக்கினால் உறிஞ்சிப் பார்த்து

விட்டு, "ஆம், அது சுயமுக்கியத்துவத்தின் வாசனையாக உள்ளது என்று நான் நினைக்கிறேன்" என்று கூறினார்.

கிறிஸ்தவம் என்பது மாபெரும் சமப்படுத்தியாக உள்ளது (கலாத்தியர் 3:28). கிறிஸ்து, வகுப்பு வித்தியாசத்தையோ அல்லது ஜாதிமுறைமைகளையோ அங்கீகரிப்பதில்லை. நான் அபிலைன் கிறிஸ்தவக் கல்லூரியில் (இப்போது பல்கலைக்கழகமாக உள்ளது) பயின்றபோது, கல்லூரியின் தலைவர், அந்தக் கல்லூரியில் ஆராதித்த கிறிஸ்துவின் சபையினுடைய மூப்பர்களில் ஒருவராக இருந்தார். அந்தக் கல்லூரியின் வாயிற்காப்பவர்களில் ஒருவரும் அவ்வாறே மூப்பராக இருந்தார். இவ்விருவரும் மூப்பர்களின் கூட்டங்களில் ஒன்றாக அமரும் போது, ஒரு மனிதரின் கருத்து மற்றொரு மனிதரின் கருத்தைப்போன்றே முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது.

பவுலின் நாட்களிலிருந்த சூழ்நிலைக்குத் திரும்புவோம், பெரும்பான்மையான சபைக்குழுமங்களில் ஏழை உறுப்பினர்களே அதிக சதவிகிதத்தில் இருந்தனர் (1 கொரிந்தியர் 1:26-28). மேலும், எஜமானர்களும் அடிமைகளும் கிறிஸ்தவர்கள் ஆயினர் (காண்க எபேசியர் 6:5-9). ஒரு ஆராதனை ஊழியத்தில், முதன்முறையாக ஒரு எஜமானரும் அவரது அடிமையும் ஒருவர் மற்றவருக்கு அருகில் அமர்ந்து, கர்த்தருடைய இராப்போஜனத்தில் ஒன்றாகப் பங்கேற்கையில் ஏற்பட்டிருக்கக்கூடிய உணர்ச்சிக் கொந்தளிப்பைப்பற்றி உங்களால் கற்பனை செய்ய முடிகிறதா?

எல்லா மக்களிடத்திலும் நாம் கிறிஸ்தவர்களைப் போன்று செயல்பட தேவன் நமக்கு உதவுவாராக. ஏறக்குறைய ஒவ்வொரு சபைக்குழுமத்திலும், குறைந்தபட்சம் ஒருநபராவது, தாம் அந்த இடத்திற்கு உரியவரல்ல என்றோ அல்லது வேதனை நிறைந்த வகையில் வெட்கமாகவோ உணருபவராக இருப்பார். ஒரு கிறிஸ்தவர் அப்படிப்பட்ட தனிநபர்களை நாடி, அவர்களைச் சந்தித்து, அவர்களுக்கு உதவிசெய்து, ஏற்றுக்கொள்ளுதலையும் அன்பையும் அவர்களுக்கு விளக்குபவராக இருக்க வேண்டும்.

16ம் வசனத்தின் இப்பகுதியை விட்டுச் செல்வதற்கு முன்னர், சிலர் "தாழ்மை" என்பது "தாழ்மையான[வர்கள்]" என்பதற்கு பதில் "தாழ்மையான [வைகள்]" என்பதைக் குறிப்பதாக நினைக்கின்றனர் என்பதை நான் குறிப்பிட்டாக வேண்டும். TEV வேதாகமத்தில் "தாழ்மையான கடமைகள்" என்றுள்ளது. NIV வேதாகமத்தில் பின்வரும் அடிக்குறிப்பு உள்ளது: "அல்லது *தாழ்மையான பணிகளைச் செய்ய மனவிருப்பமாக இருங்கள்.*" இதைக் கூறுவதற்குப் பவுல் நோக்கங்கொண்டிருந்தாலும் இல்லையென்றாலும், இது ஆழ்ந்து சிந்திக்கத் தகுதியான ஒரு சத்தியமாக உள்ளது. தாழ்மையான பணிப்பொறுப்புக்களைச் செய்ய [கூடாத அளவுக்கு] நாம் "மிகவும் நல்லவர்களாக" இருப்பதாக நாம் ஒருக்காலும் நினைக்கக் கூடாது. இயேசு தமது சீஷர்களின் பாதங்களைக் கழுவியபோது, அவர் ஒரு அடிமையின் வேலையைச் செய்தார் (யோவான் 13:5-17). பவுல் தமது கைகளினால் வேலைசெய்து அடிக்கடி தமக்கு ஆதரவைத் தேடிக்கொண்டார் (1 கொரிந்தியர் 4:12; நடபடிகள் 18:3). உலகம் முழுவதிலும், ஞாயிற்றுக்கிழமைகளில் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கக் கூடும்படிக்கு, "உலகப்பிரகாரமான வேலை" என்று அழைக்கப்படும் வேலைகளை வாரம்முழுவதிலும் செய்யும் கிறிஸ்தவர்கள் இருக்கின்றனர்.

**புத்திமதி**

ரோமர் 12:16ஐப் பவுல் பின்வரும் புத்திமதியுடன் முடித்தார்: "உங்களையே புத்திமான்களென்று எண்ணாதிருங்கள்" (வசனம் 16இ; காண்க நீதிமொழிகள் 3:7). "எல்லாம் அறிந்துள்ளதாக" செயல்படும் யாரேனும் ஒருவரைப் பற்றி நீங்கள் எப்போதாவது அறிந்திருக்கிறீர்களா? தலைப்பு எதுவாக இருந்தாலும், அவர் அந்தப் பாடக்கருத்தின்மீது தாம் "ஒரு அதிகாரத்துவம்" கொண்டுள்ளதாக ஒவ்வொருவரையும் நம்பி இணங்க வைக்க அவர் முயற்சி செய்கிறார். அவ்வாறான மக்களை நாம் பொதுவாகத் தவிர்க்கவே விரும்புகிறோம். லியோன் மோரீஸ் என்பவர், "ஒரு நபர் தமது சொந்தக் கண்களில் ஞானமுள்ளவராக இருந்தால், அவர் மற்றவர்களின் கண்களில் அவ்வாறு இருப்பது அரிது" என்று எழுதினார்.[9] இருப்பினும், மற்றவர்கள் மீது விரல்களைச் சுட்டுதல் என்பதல்ல, ஆனால் நம்மையே பரிசோதனை செய்துகொள்ளுதல் என்பதே, நமக்கான பவுலின் நோக்கமாகும். நாம் ஞானத்தைப் பற்றி வேதாகமக் கருத்துக்களில் பேசினாலும்சரி அல்லது "தெளிவான பழைய பொது அறிவில்" பேசினாலும்சரி, உண்மையில் ஞானமுள்ளவர்கள், தாங்கள் அறியாதவை நிறைய உள்ளன மற்றும் தாங்கள் புரிந்துகொள்ளாதவை நிறைய உள்ளன என்பதை அறிந்துள்ளனர்.

"ஒரு கிறிஸ்தவர் யாரைப்போல் காணப்படுகிறார்?" அவர் *தாழ்மை யானவராக* இருக்கிறார். இது அவர் மற்ற கிறிஸ்தவர்களுடன் செயல்படும்போதும் அல்லது இந்த உலகத்தாருடன் செயல்படும் போதும் உண்மையானதாக உள்ளது. அவர் ஒவ்வொருவரையும் மதிக்கிறார் மற்றும் ஏற்றுக்கொள்கிறார் மற்றும் அவர் வேறெவரைக் காட்டிலும் தாம் மேலானவர் என்ற மனப்பதிவை விட்டுச் செல்ல ஒருக்காலும் முயற்சி செய்வதில்லை. ஜான் R. W. ஸ்டாட் என்பவர், "மேட்டிமையின் ஒருசில வகைகள் போலிப்பகட்டைக் காட்டிலும் மோசமானவைகளாக உள்ளன" என்று கூறினார்.[10]

ஒருவேளை நான் ஒரு மறுதலிப்பை இடைச்செருகியாக வேண்டும். "ஏற்றுக்கொள்ளுதல் என்பது அங்கீகரித்தல் என்று அர்த்தப்படுவதில்லை."[11] நாம் மற்றவர்களின் விசுவாசங்கள் அல்லது வாழ்வுநடைகள் ஆகியவற்றை அங்கீகரிக்காமலேயே அவர்களுக்கு மரியாதை காண்பிக்க முடியும். இயேசு, "பாவிகளுக்கும் சிநேகிதன்" ஆக இருந்தார் (மத்தேயு 11:19), ஆனால் "இனிப் பாவஞ்செய்யாதே" என்பதே அவருடைய அறைகூவலாக இருந்தது (யோவான் 8:11).

இன்னும் ஒரு நடைமுறைப் பயன்பாட்டை நாம் ஆழ்ந்து சிந்திப்போமாக. பவுல் குறிப்பாக நாம் "மேல்தட்டு வர்க்கம்" என்று அழைக்கக்கூடிய மக்களுக்கு இதை உரைத்தார், ஆனால் எனது அனுபவத்தில், வாழ்வில் மக்களின் தராதரங்கள் எவ்வாறு இருப்பினும், ரோமர் 12:16ன் செய்தியானது, *எல்லா* மக்களுக்கும் தேவைப்படுகிறது. கொஞ்சப் பணம் கொண்டவர்கள் பணக்காரர்களைப் பற்றி மனக்கசப்புடன் பேசுவதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். சிறிதளவே கல்விகற்றவர்கள், மேம்பட்ட பட்டங்கள் பெற்றுள்ளவர்களைக் குறித்துக் கேலி பேசுவதை நான் கேள்விப்பட்டு இருக்கிறேன். ஏதோ *சில* காரணங்களுக்காக நாம் மற்றவர்களைக் காட்டிலும் மேம்பட்டவர்கள் என்று நினைக்கும் உள்ளான மனவிருப்பம் ஒன்றுள்ளது: நாம் வாழும் இடம் பற்றிய காரணத்தால், நமது தோலின் நிறம் பற்றிய காரணத்தால், குறிப்பிட்ட ஒரு அரசியல் கட்சியில் நாம் இணைவு கொண்டுள்ள காரணத்தால் - நீங்கள் இந்தப் பட்டியலுடன்

பிறவற்றைச் சேர்த்துக்கொள்ள முடியும். இப்படிப்பட்ட விஷயங்கள் ஒரு கிறிஸ்தவருக்குச் சிறிதளவே முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. அவர் எல்லா மக்களையும் நேசிக்கிறார், மற்றும் அவர் தாழ்மையுள்ளவராக இருக்கிறார்.

## முடிவுரை

ரோமர் 12:9-16 வசனப்பகுதிக்கு நாம் இரண்டு பாடங்களை அர்ப்பணித்துள்ளோம். இவ்வசனங்கள், நாம் உலகத்தாரிலிருந்து மாறுபட்ட வாழ்வை வாழவேண்டும் என்று கிறிஸ்து விரும்புகிறார் என்பதைத் தெளிவாக்குகின்றன. அவர் எல்லாக் கிறிஸ்தவர்களும், அன்புள்ளவர்களாக, சுயநலம் இல்லாதவர்களாக, பற்றார்வம் உடையவர்களாக, நிலைமாறாதவர்களாக, உதவிநிறைந்தவர்களாக, இரக்கம் உள்ளவர்களாக, பரிவிரக்கம் உள்ளவர்களாக, மற்றும் தாழ்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று அழைக்கிறார். நீங்கள் உங்களுக்கான சொந்த நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்தியிருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன்: "என்னைச் சுற்றிலும் இருப்பவர்கள் என்னில் 'ஒரு கிறிஸ்தவர் யாரைப்போல் காணப்படுகிறார்'?" என்பதைக் கண்டிருக்கிறார்களா?

ரோமர் 12:9-16ல் கர்த்தர், உலகத்தின் உதாரணம் மற்றும் தர அளவைகள் ஆகியவற்றிற்கு மேலான வாழ்வை வாழும்படி நமக்கு அறைகூவல் விடுத்துள்ளார். இதை அவரது உதவியுடன் நாம் செய்ய *முடியும்* என்று அவர் கூறியுள்ளார். நாம் இந்த அறைகூவலை ஏற்றுக்கொண்டு, கிறிஸ்தவர்கள் வாழவேண்டிய பிரகாரம் வாழ்வோமா, அல்லது பவுலின் வார்த்தைகள் நமது வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்த அனுமதிக்காமலேயே அவற்றை நாம் கேள்விப்படுவோமா?

## பிரசங்கியார்கள் மற்றும் போதகர்களுக்கான குறிப்புகள்

நீங்கள் இந்தப் பிரசங்கத்தை எடுத்துரைக்கும்போது, உங்கள் உரையைக் கேட்பவர்கள் எவ்வாறு கிறிஸ்தவர்கள் ஆக முடியும் என்று அவர்களுக்குக் கூற நீங்கள் விரும்பலாம் (மாற்கு 16:16; நடபடிகள் 2:38). மேலும், தவறு செய்யும் கிறிஸ்தவர்கள் மீளக்கட்டுவிக்கப்பட்டுக் கிறிஸ்தவர்களாக மீண்டும் வாழத்தொடங்குவது எவ்வாறு என்பதைப் பற்றியும் கூறுங்கள் (நடபடிகள் 8:22; 1 யோவான் 1:9). "அன்புகூருவதற்கான அறைகூவல் (12:9-13)" என்ற பாடத்தில் போலவே, இதிலும் நான் ஒரு வசனத்திற்கு ஒரு பிரதானத் தலைப்பையே பயன்படுத்தினேன்; ஆனால் நீங்கள் 3ம் வசனத்திற்குப் பல பிரதான தலைப்புகளைப் பயன்படுத்த முடியும்.

---

குறிப்புகள்

[1]ரோமர் 12:9-16ஐ நீங்கள் ஒரேபடிப்பாகப் பயன்படுத்தவும், இந்தப் பாடத்தின் தலைப்பை அதற்குப் பயன்படுத்தவும் விரும்பினால், இந்தப் பெயர் உரிச்சொற்கள் - ஒவ்வொரு வசனத்திற்கும் - உங்கள் பிரதானத் தலைப்புகளாக இருக்க முடியும். "அன்புகூர அறைகூவல் (12:9-13)" என்ற பாடத்தில், நாம் அன்பின் முதல் ஐந்து பண்புகளைக் கண்ணோக்கினோம். [2]R. C. Bell, *Studies in Romans* (Austin, Tex.: Firm Foundation Publishing House,

1957), 138. [3]"உங்களை" என்பதற்கான கிரேக்க வார்த்தை, பழங்காலக் கையெழுத்துப் பிரதிகள் பலவற்றில் விடப்பட்டுள்ளது, எனவே சில விளக்கவுரையாளர்கள், பவுலின் புத்திமதி பொதுவில் துன்புறுத்துபவர்களுக்கு நடைமுறைப்படுகிறது என்று கருத்துத் தெரிவிக் கின்றனர். [4]Adapted from W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 69. [5]இவ்வகை மொழியானது வேறொரு இடத்தில் கண்டனம் பண்ணப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, கொலோசெயர் 3:8ம் வசனம் "தூஷணப் பேச்சை" கடிந்துகொள்கிறது ("filthy communication"; KJV). [6]Luke Hartman, "God's Call to Love," sermon preached at Eastside church of Christ, Midwest City, Oklahoma, 17 July 2005. [7]"உங்களுக்குச் சேர வேண்டிய பாராட்டை அவர் பெற்றுக்கொண்டார்" என்பது போன்ற, நீங்கள் வாழும் இடத்திற்குப் பொருத்தமான விளக்கங்களைக் கூட்டிக்கொள் ளுங்கள். [8]"மேட்டிமையானவைகள்" என்பது "உயர்வானவை" (*hupselos*) என்பதற்கான பெயர் உரிச்சொல்லிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. "உயர்வானவை[விஷயங்] களை மனதில் கொள்ளாதிருங்கள்" என்பது கிரேக்க மொழியின் நேரடித் தரவழைப்பாக இருக்கும் (KJV வேதாகமத்தில் காணவும்), இதில் "விஷயங்கள்" என்ற வார்த்தை [மொழி பெயர்ப்பாளர்களால்]அளிக்கப்பட்டு இருக்கிறது. சிலர், "மக்கள்" என்ற வார்த்தை அளிக்கப் பட்டிருக்க வேண்டும் என்று நினைக்கின்றனர். LB வேதாகம பொழிப்புரையில், "Don't try to get into good graces of important people, but enjoy the company of ordinary folks" என்றுள்ளது. [9]Leon Morris, *The Epistle to the Romans* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 451. [10]John R. W. Stott, *The Message of Romans: God's Good News for the World,* The Bible Speaks Today series (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1994), 333.

[11]Richard A. Batey, *The Letter of Paul to the Romans,* The Living Word Commentary (Austin, Tex.: R. B. Sweet Co., 1969), 155.